**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 164** **நாள்: 22.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாம்கள் நடைபெற உள்ளது.**

அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) சென்னை மாவட்டத்தின் சார்பாக 1 முதல் 18 வயது வரையுள்ள செவித்திறன் குறைபாடு, பார்வைத்திறன் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 8 மண்டலங்களில் 23.10.2018 முதல் 26.10.2018 வரை நடைபெற உள்ளது. இம்முகாம்களில் முடநீக்கு வல்லுநர், தொண்டை, காது, மூக்கு மருத்துவர், மனநல மருத்துவர், கண் மருத்துவர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் ஆகியோர் குழந்தைகளை பரிசோதனை செய்து மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரை செய்வார்கள். இம்முகாமிற்கு வருபவர்கள் மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் 4 புகைப்படம், வருவாய் சான்றிதழ், ஆதார் அட்டை, மருத்துவச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றின் நகல்கள் கொண்டு வர வேண்டும். இச்சிறப்பு முகாம்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் இடங்களில் காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெற உள்ளது.

| வ. எண் | நாள் | மண்டலம் | நடைபெறும் இடம் | தொடர் கொள்ள வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1 | 23.10.2018 | மண்டலம்–5<br>இராயபுரம் | சென்னை உருது பெண்கள் தொடக்கப்பள்ளி,<br>எண்.71, அரத்தூண் சாலை,<br>இராயபுரம், சென்னை–13. | 97888 58511<br>97890 14961<br>89390 54856 |
| 2 | | மண்டலம்–10<br>கோடம்பாக்கம் | சென்னை தொடக்கப்பள்ளி,<br>4வது பிரதான சாலை, சி.ஐ.டி. நகர்,<br>நந்தனம், சென்னை–35. | 97888 58518<br>94447 58150<br>97890 81918 |
| 3 | 24.10.2018 | மண்டலம்–10<br>கோடம்பாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>பிரகாசம் சாலை, பனகல் பார்க் அருகில், தி.நகர், சென்னை–17. | 97888 58517<br>99402 11634<br>94453 22173 |
| 4 | | மண்டலம்–5<br>இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>வி.கே.பிள்ளை தெரு, சூளை,<br>சென்னை–112. | 97888 58512<br>98401 42460<br>94452 49168 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 25.10.2018 | மண்டலம்–6, திரு.வி.க.நகர் | சென்னை தொடக்கப்பள்ளி, டி.வி.கே. நகர், பெரம்பூர், சென்னை–11. (டி.வி.கே. நகர் பேருந்து நிலையம் டிப்போ அருகில்) | 97888 58513<br>90438 56276<br>97907 41543 |
| 6 | | மண்டலம்–9, தேனாம்பேட்டை | சென்னை சமுதாய கல்லூரி, 24, அருணாச்சலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5. | 97888 58515<br>97888 77955<br>89392 54871 |
| 5 | 26.10.2018 | மண்டலம்–9 தோனம்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி, இராமா தெரு, வள்ளுவர் கோட்டம் (சுதந்திர பூங்கா அருகில்) நுங்கம்பாக்கம், சென்னை–34. | 97888 58516<br>94440 49403<br>91763 83727 |
| 6 | | மண்டலம்–8 அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி மெக் நிக்கோலஸ் சாலை, சேத்துப்பட்டு, சென்னை–31. (சேத்துப்பட்டு பாலம் அருகில்) | 97888 58514<br>74013 31608<br>89250 67494 |

மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் பெற்றோர்கள்/காப்பாளர்கள் தங்களது குழந்தைகளை இம்முகாமிற்கு கலந்துக்கொள்ள செய்து மாற்றுத்திறனாளி அட்டை மற்றும் தமிழக அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடையுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**